உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை செய்தியாக வெளியிட கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்
7401 22 4449

# செஞ்சி G டைம்ஸ்

வார இதழ்

# GINGEE TIMES

Weekly Sunday
Volume.1, Issue.1 Dec 28, 2025 - Jan 03, 2026 8 Pages
PRGI Regd. No. TNTAM/25/A4736 Free Circulation

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

Contact: 7401224449 e-mail: gingeetimes@gmail.com / Gingee Times



# இருப்பிடத்தை துல்லியமாக கண்டறிவதால் ஆபத்தான நேரத்தில் கைகொடுக்கும் இஎல்எஸ் சேவை

## கூகுள் அறிமுகம்: செல்போன் பயனர்கள் மகிழ்ச்சி

**லக்னோ:** இணையதள நிறுவனமான கூகுள் தனது அவசர இருப்பிட சேவை (ELS) என்ற வசதியை செல்போன் பயனர்களுக்கு அறிமுகப்படுத்தி உள்ளது. தற்போது இந்தியாவில் உத்தரபிரதேச மாநிலத்தில் செயல் பாட்டுக்கு வந்துள்ளது.

நாம் செல்போனில் 112 போன்ற அவசர எண்ணை டயல் செய்யும்போது, இந்த அம்சம் தானாகவே அழைப்பாளரின் துல்லியமான இருப்பிடத்தை அவசர சேவைகளுடன் பகிர்ந்து கொள்கிறது. ஒருவர் இக்கட்டான நிலையில் இருக்கும்போது தனது செல்போனில் மேற்கண்ட அவசர எண்ணை தொடர்பு கொள்ளும்போது ELS அம்சம் கூகுளின் ஆண்ட்ராய்டு இயக்க வசதியுடன் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது மற்றும் GPS, Wi-Fi மற்றும் மொபைல் நெட்வொர்க்குகளிலிருந்து வரும் சிக்னல்களை பயன்படுத்தி அழைப்பாளரின் இருப்பிடத்தை கண்டறிய உதவுகிறது.

இது 50 மீட்டர் வரை துல்லியத்தை வழங்க முடியும்.




அழைப்புகளின் போது சிறந்த சூழலுக்காக அவசரகால பதிலளிப்ப வர்களுடன் சாதன மொழி போன்ற பிற பயனுள்ள தகவல்களையும் இந்த சேவை பகிர்ந்து கொள்கிறது. ELS இன் வெற்றிகரமான முன்னோடி திட்டம் பெர்ட் டெலிகாம் சொல்யூஷன்ஸின் ஆதரவு மற்றும் உத்தரபிரதேச காவல்துறையின் ஒருங்கிணைப்புடன் ELS அம்சத்தை செயல்படுத்தும் முதல் இந்திய மாநிலம் உத்திரப் பிரதேசம் ஆகும்.

சில மாதங்களாக நடந்த சோதனையின் போது, மாநிலம் முழுவதும் 20 மில்லியனுக்கும் அதிகமான அவசர அழைப்புகள் மற்றும் செய்திகளுக்கான இடங்களை ELS அடையாளம் கண்டுள்ளதாக கூகுள் தெரிவித்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில், அழைப்புகள் செய்யப்பட்ட சில நொடிகளில் துண்டிக்கப்படும் போது கூட அது இருப்பிட விவரங்களை வழங்கியது. பயனர் தனியுரிமை மற்றும் அணுகல் தன்மையை ELS முன்னுரிமைப்படுத்துகிறது

இந்த அம்சம் இலவசமாக வழங்கப்படுகிறது. அவசர அழைப்புகள் அல்லது செய்திகளின் போது மட்டுமே செயல்படுத்தப்படும். இதற்கு கூடுதல் செயலி பதிவிறக்கம் அல்லது சிறப்பு hardware எதுவும் தேவையில்லை.

தற்போது, உ.பி.யில் பதிப்பு 6.0 மற்றும் அதற்கு மேற்பட்ட பதிப்புகளில் இயங்கும் ஆண்ட்ராய்டு சாதனங்களில் ELS அம்சம் வழங்கப்படுகிறது.

வரும் மாதங்களில் மேலும் பல இந்திய மாநிலங்கள் இந்த தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் என்று கூகுள் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## மூத்த குடிமக்களுக்கு கையொப்பம் மூலம் ரேஷன் பொருட்கள் வழங்க முடிவு

மூத்த குடிமக்களின் வீடுகளுக்கு நேரடியாக ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப் படுகிறது. அப்போது மூத்த குடிமக்களுக்கு விரல் ரேகை பதிவு மூலம் ரேஷன் பொருட்கள் வழங்குவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. இதை தவிர்க்க அவர்களிடம் கையொப்பம் பெற்று ரேஷன் பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த நடைமுறை விரைவில் அமலுக்கு வரும் என்று உணவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 13 வயதில் ஐஐடி 24 வயதில் பிஎச்டி

## பீகார் இளைஞர் சாதனை




பாட்னா: விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்ற பழமொழிக்கேற்ப 13 வயதில் ஐஐடியில் சேர்ந்து 24 வயதில் பிஎச்டி பட்டமும் பெற்று சாதனை படைத்துள்ளார் பீகார் மாநில இளைஞர் ஒருவர். அவரது பெயர் ததகத் அவதார் துளசி. இவர் தனது 9 வயதிலேயே பத்தாம் வகுப்பை முடித்து கின்னஸ் சாதனை படைத்தார். தொடர்ந்து 10 வயதில் பிஎஸ்சி (B.Sc) மற்றும் 12 வயதில் எம்எஸ்சி (M.Sc) பட்டங்களை முடித்தார்.

இவரது திறமையைக் கண்டு வியந்த ஐஐடி மும்பை, 13 வயதிலேயே இவரை ஆராய்ச்சி மாணவராக ஏற்றுக்கொண்டது. இது ஐஐடி வரலாற்றிலேயே மிக இளம் வயதில் ஒரு மாணவர் சேர்க்கப்பட்ட நிகழ்வாகும். பல சவால்களுக்கு மத்தியிலும், தனது விடாமுயற்சியால் 24 வயதிற்குள் குவாண்டம் கம்ப்யூட்டிங் துறையில் பிஎச்டி முடித்து சாதனை படைத்தார்.

தனது பிஎச்டி படிப்பிற்குப் பிறகு, ஐஐடி மும்பையில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். மிக இளம் வயது பேராசிரியர் என்ற பெருமையையும் இவர் தட்டிச்சென்றார்.

பீகாரின் ஒரு சாதாரண கிராமத்திலிருந்து புறப்பட்டு உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனத்தில் பேராசிரியராக உயர்ந்த இவரது கதை, பல ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

## 2026ம் ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஜன. 20ம் தேதி தொடங்குகிறது



சென்னை: சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், “2026ம் ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஜன. 20ம் தேதி காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது. அப்போது தமிழ்நாடு அரசு தயாரிக்கும் உரையை ஆளுநர் வாசிப்பார். ஏற்கெனவே பின்பற்றப்படும் அவை மரபுபடி தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்து தமிழக ஆளுநரின் உரை இடம்பெறும். ஆளுநர் சட்டப்பேரவையின் மாண்பை நிச்சயம் காப்பாற்றுவார் என நம்புகிறேன். தொடர்ந்து அலுவல் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு மொத்தமாக எத்தனை நாட்கள் அவையை நடத்துவது என முடிவு செய்யப்படும் என்றார்.

அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில், இந்த அறிவிப்பு தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.


செஞ்சி டைம்ஸ்

வார இதழ்

ஞாயிறு தோறும் இலவசமாக விநியோகிக்கப்படும்

விளம்பரம் செய்ய அணுகவும்

9655624449



Readers are recommended to make appropriate enquires before entering into deals with advertisers who advertise in this publication. The Editor and Publisher do not vouch for any claims made by advertisers and hence shall not be held liable for any adverse consequences.

## அழகிய வண்ணம் தீட்டுங்கள்




இங்கே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் அழகிய வண்ணங்களை தீட்டி போட்டோ எடுத்து **7401224449** என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்புங்கள்.
இந்த போட்டியில் 5 வயது முதல் 8 வயது வரை மட்டுமே கலந்து கொள்ள முடியும்.
சிறந்த வண்ணங்களை தீட்டும் 3 சிறார்க்கு பரிசு வழங்கப்படும்.

## சொற்களை கண்டுபிடி..!
## போட்டி-01




இந்த வட்டத்தில் மறைந்திருக்கும் 'அ' என்று ஆரம்பிக்கும் சொற்களை கண்டுபிடியுங்கள் குட்டீஸ்.!

சிறார்கள் தமிழ் வாசிக்க கற்றுக் கொள்ளவே இந்த போட்டி நடத்தப்படுகிறது. இந்த போட்டியில் 5 வயது முதல் 15 வயது வரை மட்டும் கலந்து கொள்ள முடியும்.

அதிகமான சொற்களை கண்டுபிடிக்கும் 3 சிறுவருக்கு பரிசு வழங்கப்படும். நீங்கள் கண்டுபிடிக்கும் சொற்களை வெள்ளைதாளில் எழுதி போட்டோ எடுத்து **7401224449 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்புங்கள்.**

மற்றவர்கள் முயற்சி செய்து பாருங்கள்... நண்பர்களே!

**QR Code Scan செய்து**
**செஞ்சி டைம்ஸ் வாட்ஸ்ஆப் சேனலில்**
**இன்றே இணைந்திடுங்கள்**

Gingee Times
WhatsApp channel

பிறந்தநாள் வாழ்த்து, திருமண நாள் வாழ்த்து விளம்பரங்களுக்கு சிறப்பு சலுகை உண்டு.
மேலும் விபரங்களுக்கு
**74012 24449**


உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை
செய்தியாக வெளியிட கீழ்கண்ட
வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்
**74012 24449**

# ஹஜ் புனித யாத்திரை செல்ல ஜன. 15க்குள் விண்ணப்பிக்கலாம்

**சென்னை:** ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்பவர்கள் வரும் ஜன. 15 ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தமிழ்நாடு ஹஜ் ஏற்பாட்டாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சென்னை சேப்பாக்கத்தில் அச்சங்கத்தின் மௌலானா சம்சுதீன் காசிம், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் 1 லட்சத்து 75 ஆயிரம் ஹாஜிகள் ஹஜ் புனித யாத்திரையை நிறைவேற்ற சவுதி அரேபியா சென்று வருகின்றனர். இவர்களில் சுமார் 1 லட்சத்து 23 ஆயிரம் பேர் ஹஜ் கமிட்டி மூலமாகவும், 52 ஆயிரம் பேர் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற ஹஜ் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் சென்று வருகின்றனர். வழக்கமாக தனியார் நிறுவனங்கள் மூலம் பயணம் செய்பவர்கள் மே, ஜூன் ஆகிய மாதங்களில் பயணத்தை தொடங்குவதற்கு சுமார் 10 நாள்களுக்கு முன்பு வரை பதிவு செய்வார்கள். ஆனால், இம்முறை ஹஜ் காலத்துக்கு சுமார் 5 மாதங்களுக்கு முன்பாக அதாவது, வரும் ஜன. 15ஆம் தேதிக்குள் தங்களுடைய ஹஜ் பயண பதிவை முடித்துக் கொள்ள வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.



இந்த நிலையில், சவுதி அரேபியா மற்றும் இந்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஹஜ் பயண ஏற்பாட்டாளர்கள், தனியார் ஹஜ் சர்வீஸ் நிறுவனங் களின் பெயர் பட்டியல் இந்திய அரசின் சிறுபான்மை நலத் துறை அமைச்சகம் மற்றும் இந்திய ஹஜ் கமிட்டி ஆகியவை இணையதள பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ளது. எனவே, ஹஜ் பயணம் மேற்கொள்வோர், இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாகப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.






## சர்வேயரை கண்டித்து நாற்றுகளைக் கொட்டி விவசாயி ஆர்ப்பாட்டம்



மேல்மலையனூர் தாலுகா அலுவலகம் எதிரே, சர்வேயரை கண்டித்து விவசாயி நாற்றுகளைக் கொட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

மேல்மலையனூர் அடுத்த தாழங்குணம் கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜேந்திரன், 34; விவசாயி. இவரது நிலத்தை அளவீடு செய்வதற்காக ஐகோர்ட்டில் ஒரு மாதத்திற்கு முன் உத்தரவு பெற்றார்.

தொடர்ந்து மேல்மலையனூர் தாலுகா அலுவலகத்தில் சர்வேயரிடம் நிலம் அளவீடு செய்யக்கோரி பல முறை மனு அளித்துள்ளார். ஆனால், சர்வேயர் நிலம் அளப்பது குறித்து முறையாக பதில் அளிக்கவில்லை.

இதனால், ஆத்திரமடைந்த விவசாயி, நேற்று மதியம் தாலுகா அலுவலகம் எதிரே தனது ஆதரவாளர்களுடன் சென்று, நாற்றுகளைக் கொட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். வருவாய்த் துறை அதிகாரிகள் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# டிரைவர்களுக்கு லாபத்தில் பங்கு கிடைக்கும் இந்தியாவில் விரைவில் பாரத் டாக்ஸி சேவை


## உள்துறை அமைச்சர் அமித்ஷா தகவல்

**புதுடெல்லி:** இந்தியாவில் விரைவில் ‘பாரத் டாக்ஸி’ சேவையை அறிமுகப்படுத்த உள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் பஞ்ச் குலாவில் நடந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அமித் ஷா,

“மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் முன் முயற்சியின் மூலம், விரைவில் ‘பாரத் டாக்ஸி’ திட்டத்தை தொடங்கவுள்ளோம். இதன் மூலம் கிடைக்கும் லாபத்தின் ஒவ்வொரு பகுதியும் ஓட்டுநர்களுக்குச் செல்லும். இது வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதோடு, ஓட்டுநர்களின் லாபத்தையும் அதிகரிக்கும்.

ஹரியானா எப்போதும் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் பால் உற்பத்திக்கு முக்கிய பங்களித்து வருகிறது. மேலும் விளையாட்டுத் துறையில் நாட்டிற்கு பதக்க மழையை கொண்டு வந்துள்ளது. எந்தத் துறையாக இருந்தாலும் ஹரியானா மக்கள் சாதனை படைத்து வருகின்றனர்.






ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் உணவு தானிய உற்பத்தியில் நாட்டைத் தன்னிறைவு அடையச் செய்து, உலகில் மரியாதை ஈட்டும் பணியைச் செய்துள்ளன. ஒரு சிறிய மாநிலமாக இருந்தபோதிலும், எந்தவொரு மத்திய ஆயுதக் காவல் படை மற்றும் முப்படைகளிலும் அதிக வீரர்களை அரியானாவின் தாய்மார்கள் வழங்குகிறார்கள். அவர்களின் வீரத்தினால்தான் இந்தியாவின் ராணுவமும் ஆயுதப் படைகளும் பல படையெடுப்புகளை வெற்றி கரமாக முறியடிக்க முடிந்தது.

2014ல் மோடி பிரதமரான போது, நாட்டின் விவசாய பட்ஜெட் ரூ.22 ஆயிரம் கோடியாக இருந்தது, அது இப்போது ரூ.1 லட்சத்து 27 ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மேம்பாட்டுக்கான பட்ஜெட் முன்பு ரூ.80 ஆயிரம் கோடியாக இருந்தது, அதை பாஜக அரசாங்கம் ரூ.1 லட்சத்து 87 ஆயிரம் கோடியாக உயர்த்தியுள்ளது” என்று அமித் ஷா கூறினார்.

முன்பதிவு நடைபெறுகிறது முந்துகள் உங்கள் மனைக்கு

G.K

ஸ்ரீ திரௌபதியம்மன் துணை

ரியல் எஸ்டேட்–ன்

அரசு அங்கீகாரம் பெற்றது : DTCP No :143/2025 RERA அனுமதி பெற்றது.

# ஸ்ரீ ஜெய் மாருதி நகர்

## கொள்ளார் ( வேம்பூண்டி கிராமம் ) சிப்காட் அருகில்

## திண்டிவனம் To செஞ்சி சாலை

1 சதுரஅடி ரூ. ~~700~~/–முதல் இப்பொழுது

## திறப்பு விழாவை முன்னிட்டு

# 1 சதுரஅடி ரூ.500/–மட்டுமே

...மனைப்பிரிவின் சிறப்பு அம்சங்கள்...

- இந்த நகர் திண்டிவனம் நகராட்சிக்கு மிக அருகில் அமைந்துள்ளது.
- இந்த நகர் அருகில் PV பாலிடெக்னிக் கல்லூரி அமைந்துள்ளது.
- 500 மீட்டரில் அருகில் சிப்காட் கம்பெனி அமைந்துள்ளது.
- இந்த நகரில் 33, 30, 24 அடி அகலம் கொண்ட சாலையாக அமைந்துள்ளது.
- ஆஞ்சநேயர் கோவில் பின்புறம் அமைந்துள்ளது.
- இந்த நகரில் அனைத்தும் தார் சாலையாக அமைய உள்ளது.
- நகரின் எல்லா மனைகளும் 24 X 50, 20 X 60, சதுரஅடியில் அமைந்துள்ளது.

இச்சலுகை : 14.12.2025 முதல் 14.01.2026 வரை முழுப்பணம் செலுத்துபவர்களுக்கு

**பத்திரப்பதிவு முற்றிலும் இலவசம்! இலவசம்!!**

மனைப்பிரிவில் அலுவலகம் செயல்படுகிறது.

*விபரங்களுக்கு அணுகவும் :*

**G.K.ரியல் எஸ்டேட் & ஸ்ரீபாலாஜீ சூப்பர் மார்க்கெட்**

நெ.79,காந்தி பஜார்,செஞ்சி

9994953565, 9585122122, 9442719051

# 10ம் வகுப்பு தேறியவர்களுக்கு கல்வெட்டு, தொல்லியல் டிப்ளமா படிப்பு

## உலக தமிழாராய்ச்சி நிறுவனம் தகவல்

**சென்னை:** தமிழக அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கல்வெட்டியல், தொல்லியல், அகழாய்வு தொடர்பான ஓராண்டு கால டிப்ளமா படிப்பை வழங்கி வருகிறது. 10ம் வகுப்பு முடித்தவர்கள் இதில் சேரலாம். வயது வரம்பு கிடையாது.

இந்த படிப்பில் கல்வெட்டு படியெடுத்தல், ஆவணப்படுத்துதல் குறித்த பயிற்சியும் அளிக்கப்படும். இதன்மூலம் தமிழக வரலாறு, மொழி, பண்பாடு, கலை, இலக்கியம் குறித்து அறிந்து கொள்ளலாம்.


இந்த டிப்ளமா படிப்பில் 2026ம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பத்தை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இணையதளத்தில் (www.ulakath-thamizh.in) பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பக் கட்டணம், சேர்க்கை கட்டணம், அடையாள அட்டை, தேர்வுக் கட்டணம் என மொத்தம் ரூ.4 ஆயிரம் செலுத்த வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கட்டணத்துக்கான கேட்புக் காசோலையை (டிமாண்ட் டிராஃப்ட்) இணைத்து, 'இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2ம் முதன்மைச் சாலை, மைய தொழில்நுட்ப பயிலக வளாகம், தரமணி, சென்னை600113' என்ற முகவரிக்கு ஜனவரி 20ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். கட்டணத்தை ரொக்கமாக செலுத்தி விண்ணப்பத்தை நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

வார விடுமுறை நாளான ஞாயிறுதோறும் முழுநேர வகுப்புகள் நடைபெறும். வகுப்பு தொடங்கும் நாள் பின்னர் தெரிவிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு 9500012272 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# குவாண்டம் அறிவியல் பிரிவில் ஆய்வு நடத்தி நோபல் பரிசு பெறுபவருக்கு ரூ.100 கோடி பரிசு

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு அறிவிப்பு



**அமராவதி:** ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மாநிலத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். பல்வேறு முதலீடுகளை ஈர்ப்பது ,அமராவதியை உலகத்தரம் வாய்ந்த ஒரு நகரமாக உருவாக்குவது என்பதற்காக தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் அமராவதி நகரத்தை குவாண்டம் தொழில்நுட்பதற்கான உலக மையமாக மாற்ற வேண்டும் என்பதில் தீவிரம் காட்டி வருகிறார்.. இதற்காக சந்திரபாபு நாயுடு ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறார். இதன்படி ஆந்திர மாநிலத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் குவாண்டம் அறிவியல் பிரிவில் ஆய்வு நடத்தி அதற்கு நோபல் பரிசு பெற்றால் அவருக்கு 100 கோடி ரூபாய் பரிசு தொகை வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார் .

அமராவதியில் நடந்த குவாண்டம் தொழில்நுட்பம் தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய சந்திரபாபு நாயுடு இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார். மேலும் அமராவதியில் குவாண்டம் கம்ப்யூட்டிங் மையம் அமைக்கப்படும், அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களுக்கான ஒரு மாநிலமாக ஆந்திரா உருவாகும் எனவும், குவாண்டம் தொழில்நுட்பம் தான் எதிர்காலம் எனவும், பல்வேறு துறைகளிலும் இன்னும்சில ஆண்டுகளில் குவாண்டம் தொழில்நுட்பத்தின் பங்கு அதிகரிக்கும், சுகாதாரத் துறையில் இது தவிர்க்க முடியாத தொழில்நுட்பமாக மாறும், இந்தியாவில் குவாண்டம் தொழில்நுட்பத்தில் முதல் மாநிலமாக ஆந்திரா விளங்கும் என தெரிவித்திருக்கிறார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் குவாண்டம் கம்ப்யூட்டிங் கருவிகள் ஆந்திராவின் அமராவதிலேயே உருவாக்கப்படும் என தெரிவித்த அவர் குவாண்டம் தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவதற்கும் அரசு தயாராக இருப்பதாக கூறி உள்ளார்.

.இந்த நிகழ்ச்சியில் ஐஐடி மெட்ராஸ் இயக்குனர் காமகோடி , ஐஐடி திருப்பதி இயக்குனர் சத்யநாராயணா மற்றும் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான செயலாளர் அபய் கரண்டிகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் கூட்டுறவு நகர வங்கியில்

# மாநில நகர கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் ஆய்வு

**விழுப்புரம்:** விழுப்புரத்திலுள்ள கூட்டுறவு நகர வங்கியின் செயல்பாடுகளை தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் மேலாண் இயக்குநரும், கூடுதல் பதிவாளருமான பிருந்தா ஆய்வு செய்தார். அப்போது,

வங்கியிலிருந்து வழங்கப்பட்ட மொத்த கடன் தொகைகளின் விவரம், மகளிர் சுய உதவிக்குழுக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடனுதவிகள், நகைக்கடன், வீடு அடமானக் கடன், கல்விக் கடன், சிறுவணிகக் கடன், பணிபுரியும் மகளிருக்கான கடன், தாட்கோ, டாம்கோ, டாப்செட்கோ கடன்களின் விவரங்கள், அதற்கான பதிவேடுகள், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கோப்புகள், நிலுவை விவரங்கள் போன்றவற்றை மேலாண் இயக்குநர் ஆய்வு செய்தார்..

ஆய்வின்போது கூட்டுறவுச் சங்கங்களின் விழுப்புரம் மண்டல இணைப் பதிவாளர் விஜயசக்தி, விழுப்புரம் கூட்டுறவு நகர வங்கியின் துணைப் பதிவாளர்/செயலாட்சியர் மற்றும் சரகத் துணைப் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) ராகினி, மேலாண் இயக்குநர் விக்ரமன், வங்கியின் பொது மேலாளர் (பொ) குமார், மேலாளர் (பொ) செல்வக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

# இன்போசிஸ் நிறுவனத்தில் சம்பளம் ரூ.21 லட்சம் ஐடி ஊழியர்களுக்கு இன்ப அதிர்ச்சி

**புதுடெல்லி:** இந்தியாவின் 2வது பெரிய ஐடி சேவை நிறுவனமான இன்போசிஸ் நிறுவனத்தில் பல லட்சம ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிறுவனம் ஏஐ தொழில் நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களை தேடிப்பிடித்து வருகிறது. அதற்காக சிறப்பு தொழில்நுட்ப பணிகளில் நியமிக்கப்படும் திறன்வாய்ந்த பிரஷ்ஷர்களுக்கு ஆண்டுக்கு ரூ.21 லட்சம் வரை சம்பளம் வழங்க இன்போசிஸ் முடிவு செய்துள்ளது. இதனை குழுமத்தின் மனிதவள பிரிவு தலைவர் ஷாஜி மாத்யூ தெரிவித்துள்ளார்.

இன்போசிஸ் நிறுவனம் தற்போது இன்ஜினியரிங், கம்பியூட்டர் சயின்ஸ் பட்டதாரிகளுக்கு ஆப்கேம்பஸ் இன்டர்வியூவ் நடத்தப்பட்டு வருகிறது . இந்த ஆப் கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வு செய்யப்படும் சிறப்பு திறன் கொண்ட பட்டதாரிகளுக்கு அதிகப்படியான சம்பளம் அளிக்கப்படும். அதன்படி ஸ்பெஷலிஸ்ட் புரோகிராமர் L3 (ட்ரைனி) பணிக்கு ரூ.21 லட்சம், L2க்கு ரூ.16 லட்சம், L1க்கு ரூ.11 லட்சம், டிஜிட்டல் ஸ்பெஷலிஸ்ட் இன்ஜினியர் (ட்ரைனி) பணிக்கு ரூ.7 லட்சம் சம்பளத்தை வழங்குகிறது.

இந்த ஆப் கேம்பஸ் இன்டர்வியூவல் BE, BTech, ME, MTech, MCA, இன்டக்ரேட்டட் MSc பட்டதாரிகள் கலந்துக்கொள்ள முடியும், இதேபோல் கம்பியூட்டர் சையின்ஸ், ஐடி, ECE, EEE போன்ற பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் வாய்ப்பு உள்ளது. இன்போசிஸ் 2025-2026 நிதியாண்டு முதல் 6 மாதத்தில் 12,000 பிரஷ்ஷர்களை நியமித்துள்ளது, இந்நிறுவனத்தின் வருடாந்திர இலக்கு 20 ஆயிரம் ஆகும். தற்போது இன்போசிஸ்ன் மொத்த ஊழியர் எண்ணிக்கை 3 லட்சத்து 31 ஆயிரத்து 991 ஆக உள்ளது.

அதே நேரத்தில் TCS நிறுவனம் டிஜிட்டல், பிரைம் திட்டங்களில் பணியில் அமர்த்தப்படும் ஊழியர்களுக்கு ரூ.7 லட்சம் முதல் ரூ.11 லட்சமும், HCL Tech நிறுவனம் உயர் திறன் கொண்டவர்களுக்கு மற்ற பிரஷ்ஷர்களை தாண்டி 4 மடங்கு அதிக சம்பளத்தையும் அளித்து வருகிறது. விப்ரோ டர்போ திட்டத்தில் ரூ.6.5 லட்சம் வரை சம்பளம் அளிக்கிறது.

போலி மருந்துகளால் மக்கள் பாதிப்பு

# மருந்து கடைகளில் கியூஆர் கோடு கட்டாயம்

நாடு முழுவதும் போலி மருந்துகள், தரமற்ற மருந்துகளால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுதொடர்பாக புகார் அளிக்க அனைத்து மருந்து கடைகளிலும் கியூஆர் கோடை ஒட்ட வேண்டும் என்று மத்திய மருந்து கட்டுப்பாட்டு வாரியம் கடந்த நவம்பரில் உத்தரவிட்டது.

இதன்படி தமிழக மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம், கியூஆர் கோடை உருவாக்கி அனைத்து மருந்தகங்களுக்கும் அனுப்பி உள்ளது. இதை அனைத்து மருந்து கடைகளிலும் ஒட்ட உத்தரவிடப்பட்டு உள்ளது. இந்த கியூஆர் கோடு வாயிலாக போலி, தரமற்ற மருந்துகள் தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்கலாம். இதன்பேரில் சம்பந்தப்பட்ட மருந்து நிறுவனம், மருந்தகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு இயக்கக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விளம்பரம் செய்ய அணுகவும்
7401224449

# இளம் கிரிக்கெட் வீரர் சூரியவன்ஷிக்கு ‘பால புரஸ்கார் விருது’: குடியரசுத் தலைவர் வழங்கினார்



**புதுடெல்லி:** இந்திய கிரிக்கெட் இளம் வீரர் வைபவ் சூரியவன்ஷிக்கு சிறார்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான பால புரஸ்கார் விருது வழங்கி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கவுரவித்தார்.

கலை மற்றும் கலாசாரம், வீரம், புதிய கண்டுபிடிப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சேவைகள், விளையாட்டு, சுற்றுப்புறச் சூழல் ஆகிய ஏழு பிரிவுகளில் சாதனை புரிந்த 5 முதல் 18 வயதுக்குள்பட்ட சிறார் களுக்கு ஆண்டுதோறும் வீர பால திவஸ் (டிச. 26) நாளில் பால புரஸ்கார் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

நிகழாண்டுக்கான பிரதமரின் ராஷ்டீரிய பால புரஸ்கார் விருதை பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 20 சிறார்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ராஷ்டிரபதி பவனில் உள்ள விக்யான் பவனில் வழங்கி கௌரவித்தார்.

இந்த ஆண்டு 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து 20 பேர் இந்த விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பதக்கம், சான்றிதழ், ஆவணத்தை குடியரசுத் தலைவர் வழங்கினார். இந்திய அணியின் இளம்வீரர் வைபவ் சூரியவன்ஷிக்கும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பால புரஸ்கார் விருது வழங்கி கௌரவித்தார்.

பீகாரைச் சேர்ந்த 14 வயதான வைபவ் சூரியவன்ஷி கடந்தாண்டு நடந்த மெகா ஏலத்தில் ராஜஸ்தான் ராயல் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். தொடர்ந்து தனது அதிரடி பேட்டிங்கால் வியக்கவைத்த சூரியவன்ஷி, 19 வயதுக்குள்பட்டோருக்கான ஆசியக்கோப்பை, விஜய் ஹசாரே, சையத் முஷ்டாக் அலி தொடர், இளம்வீரர்களுக்கான ஒருநாள், இளம்வீரர்களுக்கான டெஸ்ட், இந்தியா ஏ என அனைத்துப் போட்டிகளிலும் சதம் விளாசி அசத்தி வருகிறார். சமீபத்தில் நடைபெற்ற விஜய் ஹசாரே தொடரிலும் 84 பந்துகளில் 190 ரன்கள் விளாசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில் கட்டணம் உயர்வு பயணிகள் அதிர்ச்சி

**புதுடெல்லி:** சாதாரண மக்களின் முக்கிய போக்குவரத்து அம்சமாக விளங்குவது ரயில் பயணம். குறைந்த கட்டணம், நிறைந்த பயன்கள் என்பதால் மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது ரயில்வே. ஆனால் சில காலமாக ரயில் கட்டணத்தை மத்திய அரசு அடிக்கடி உயர்த்தி வருகிறது. வந்தே பாரத் போன்ற சொகுசு ரயில்களில் விமானம் அளவுக்கு கட்டணம் என்பதால் மக்கள் சாதாரண ரயில்களையே நம்பியிருக்க வேண்டி உள்ளது. ஆனால் அதற்கும் முட்டுக்கட்டை போடுவது போல மத்திய அரசு அடிக்கடி ரயில் கட்டணத்தை உயர்த்தி வருகிறது. அதன்படி இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக ரயில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ரயில்வேயின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், நிதி நிலைமையைச் சமநிலைப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், குறுகிய தூரப் பயணம் செய்யும் தினசரிப் பயணிகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்டண உயர்வு எவ்வளவு?

சாதாரண இரண்டாம் வகுப்புப் பயணிகளுக்கு (Ordinary Class), 215 கிமீ வரையிலான பயணங்களுக்குக் கட்டண உயர்வு ஏதுமில்லை.

216 கிமீ முதல் 750 கிமீ வரையிலான தூரத்திற்கு ரூ.5 மட்டும் உயர்த்தப்பட்டுள்ளது. தூரம் அதிகரிக்க அதிகரிக்க, அதிகபட்சமாக ரூ.20 வரை கட்டணம் உயரும்.

மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களைப் பொறுத்தவரை (Mail/ Express), ஏசி மற்றும் ஏசி அல்லாத அனைத்து வகுப்புகளுக்கும் கிலோமீட்டருக்கு 2 பைசா வீதம் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

உதாரணமாக, 500 கிமீ பயணத்திற்கு சுமார் ரூ.10 கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும்.

முக்கிய ரயில்கள் மற்றும் முன்பதிவு விதிகள்

வந்தே பாரத், ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ, தேஜஸ், அம்ரித் பாரத் மற்றும் கதிமான் போன்ற அனைத்து முன்னணி ரயில்களுக்கும் இந்த புதிய கட்டண உயர்வு பொருந்தும்.

புறநகர் ரயில்கள் மற்றும் சீசன் டிக்கெட்டுகளுக்கான கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பது ஆறுதல் தரக்கூடிய விஷயமாக பார்க்கப்படுகிறது.

# முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாட அரசாணை வெளியீடு




**விழுப்புரம்:** அப்போதைய ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டத்தில் விக்கிரவாண்டி சட்டப் பேரவைத் தொகுதியில் கடந்த 1952 ஆம் ஆண்டில் போட்டியிட்டு வெற்றிபெற்றவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.கோவிந்தசாமி, திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவராவர்.

இவரது பெருமையை நினைவுக்கூறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் ரூ.4 கோடியில் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை புறவழிச்சாலையில் வழுதரெட்டியில் நினைவு அரங்கம் அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி 28 ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமியின் பிறந்த நாளான ஜூன் 15ஆம் தேதியன்றும், நினைவு நாளன்றும் அவரது நினைவு அரங்கத்திலுள்ள திருவுருவச் சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கும் கோரிக்கை மனு அனுப்பியிருந்தார். இதையடுத்து முதல்வர் உத்தரவின்பேரில்

முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி மணிமண்டபத்தில் ஆண்டுதோறும் ஜூன்15ஆம் தேதி அரசு சார்பில் விழா நடத்தப்படும் என்றும், அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2026 27ஆம் நிதியாண்டு முதல் தொடர் செலவினமாக ரூ.25 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, துறையின் செயலர் ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி யின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாட நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அனைவருக்கும் விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா நன்றி தெரிவித்துள்ளார்.







Printed, Published and Owned by Saravanan, Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kitabath khan Bhadur Street, Ellies Road, Chennai-600002,. Published from No.4, Senbaga Street, Thiruvalluvar Nagar, Tindivanam-604001. Editor: Saravanan